கிண்ணியா பிரதேச சபை

திருகோணமலை மாவட்டம்

1. நிதிக்கூற்றுகள்

1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 28 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 04 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 16 ஆம் திகதி சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கிண்ணியா பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண சபைகள் மற்றும் உள்;ராட்சி அமைச்சினால் சபைக்கு வழங்கப்பட்ட ரூபா2,940,000 பெறுமதியான கெப் வாகனம் நிதிக்கூற்றுக்களில் ரூபா 2,950,000 ஆகக் காட்டப்பட்டமையால் வாகனத்தின் பெறுமதி ரூபா 10,000 தொகையால் அதிகரித்துக்காட்டப்பட்டுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான கடன் கொடுத்தோர் ரூபா 43,916 தொகை நடைமுறைப் பொறுப்புக்களில் சேர்க்கப்படாமையினால் நடைமுறைப்பொறுப்புக்களின் பெறுமதி அத்தொகையினால் குறைத்துக்காட்டப்பட்டுள்ளது.

(இ) சபையின் பொது வங்கிக் கணக்கு தொடர்பாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காசேட்டின் படியான வங்கி மீதி ரூபா 16,632 தொகையாக காணப்பட்ட போதிலும் நிதிக்கூற்றுக்களில் அத்திகதியில் உள்ளவாறான வங்கி மீதியாக ரூபா 31,632 தொகையாக காட்டப்பட்டதனால் வங்கி மீதி ரூபா 15,000 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 23,000 பெறுமதியான பிளாஸ்டிக் கதிரைகள் நிதிக்கூற்றுக்களில் வருமானச் செலவாகக் காட்டப்பட்டிருந்தது.

1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அறவிடப்பட வேண்டிய இறைச்சிக்கடை குத்தகை ரூபா 3,630,498 தொகையான நிலுவைகள் அறவிடப்படாது 08 வருடங்களாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுவருகின்றது.

(ஆ) ரூபா 2,100,675 தொகையான ஓய்ஂதியப் பங்களிப்பு மீதி கொடுத்துத்தீர்க்கப்படாது கடந்த 10 வருடங்களாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுவருகின்றது.

1.3.4 கணக்காய்வுக்கான சான்றுகள் இன்மை

பின்வரும் ஒவ்வொரு கணக்கு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்கு விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா. | |
| பொறித் தொகுதிகள் இயந்திரங்கள் | 910,925 | நிலையான சொத்துப் பதிவேடு |
| தளபாடங்கள் | 683,720 | நிலையான சொத்துப் பதிவேடு |
| மோட்டார் வாகனம் | 3,029,710 | நிலையான சொத்துப் பதிவேடு |
| முற்பணக் கொடுப்பனவு | 173,544 | காலப்பகுப்பாய்வு |
| இறைச்சிக்கடை நிலுவை | 3,630,498 | மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதம் |

1.3.5 சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் போன்றவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் பிரிவு 134(1) | பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள அசைவற்ற ஆதனங்களை இனங்கண்டு அவற்றிற்கான ஆண்டுப் பெறுமதியை மதிப்பீடு செய்து வீதவரி அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) மாகாண நிதி ஒழுங்கு விதி | |
| (i) பிரிவு 187.2 | 2013 ஆம் ஆண்டும் ரூபா 2,106,258 கூட்டுமொத்த தொகையான 68 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களும் 2014 ஆம் ஆண்டில் ரூபா 3,253,657 கூட்டுத் தொகையான 44 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களும் காணாமல் போயிருந்த போதிலும் உரிய ஏற்பாடுகளின் பிரகாரம் இது தொடர்பாக உடனடியாக கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் மாகாண திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டிருக்காததுடன் இது தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ii) விதி இலக்கம் 237 | 2012 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் சபையால் வழங்கப்பட்ட ரூபா 231,214 மொத்த பெறுமதியான 32 காசோலைகள் பணமாக மாற்றுவதற்கு இன்றுவரை வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத போதிலும் அவை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) மோட்டார் வாகன போக்குவரத்து சட்டத்தின் பிரிவு 203 | ஆண்டு தோறும் சகல வாகனங்களுக்கும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் பெறப்படல் வேண்டும். எனினும் பயன்படுத்தப்பட்டு வரும் 10 வாகனங்களுக்கு வருமான உத்தரவுப் பத்திரம் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் பெறப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2016 திசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானம் ரூபா 1,015,331 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானம் ரூபா 2,090,719 ஆக இருந்தமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 1,075,388 பின்னடைவைச் சுட்டிக்காட்டுகின்றது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டுக்கான மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், வருமான நிலுவை என்பன தொடர்பான தகவல் கீழே தரப்படுகின்றன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | 2016 திசெம்பர் 31இல் நிலுவை மீதி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| வாடகை | 5,100 | 467 | 4,633 |
| ஏனைய வருமானம் | 28,140 | 23,892 | 4,248 |

#### 2.2.2 வாடகை வருமானங்கள்

கச்சக்கொடி தீவு பொதுச் சந்தைக் கட்டடத்தைக் குத்தகைக்கு வழங்குதல்

புறநெகும செயற்திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் ரூபா 21,510,853 தொகைக்கு 2014 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட பொதுச் சந்தைக் கட்டடத்தொகுதியில் காணப்படும் 36 கடைகள் மற்றும் 32 திறந்தவெளிக் கடைகளை கிண்ணியா பிரதேச சபையானது வாராந்த சந்தை நடவடிக்கைக்காக கடை ஒன்றிடமிருந்து ரூபா 30,000 தொகையையும் திறந்தவெளிக் கடை ஒன்றிடமிருந்து ரூபா 20,000 தொகையுமாக ரூபா 1,720,000 தொகையினை மீளளிக்கத்தக்க வைப்பாக அறவிட வேண்டியிருந்த போதிலும் இன்றுவரை ரூபா 450,000 தொகையினை மாத்திரமே சபை அறவீடு செய்துள்ளது.

2.3 தொலைத் தொடர்பு கோபுரங்களுக்காக கட்டணம் அறவிடல்

சபையின் அதிகார பிரதேசத்தில் தனியார் நிறுவனங்களால் நிறுவப்பட்டுள்ள 05 தொலைத் தொடர்பு கோபுரங்கள் காணப்பட்ட போதிலும் இவற்றுக்கான கட்டணத்தைத் தீர்மானித்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2008 தொடக்கம் 2016 ஆம் ஆண்டு காலப்பகுதிகளுக்கிடையில் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட 05 வாகனங்கள் சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதும் அவற்றை சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொருள் இருப்பு பதிவேட்டிலுள்ள தகவல்களின் படி 221 குப்பைத் தொட்டிகள் களஞ்சியத்தில் காணப்படவேண்டியிருந்த போதிலும் 2017 !லை 06 ஆம் திகதி மேற்கொண்ட நேரடிப் பரீட்சிப்பின் போது அக்குப்பைத் தொட்டிகள் களஞ்சியத்தில் காணப்பட்டிருக்கவில்லை. எனினும் இது தொடர்பாக சபையினால் இன்று வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை அரசாங்கத்தின் தாபன விதிக் கோவையின் அத்தியாயம் XXIV இன் பிரிவு 4.4 இன் பிராகாரம் உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்ட கடன்களை முழுமையாக அறவீடு செய்ய முன்னர் அவ் உத்தியோகத்தர் மரணிப்பார் எனின் அவரின் வாரிசுகளுக்குச் சேரவேண்டிய ஓய்ூதியப் பணத்திலிருந்து கழித்துக் கொள்ளுமாறு ஓய்ூதியப் பணிப்பாளருக்குத் தெரிவித்தல் வேண்டும். இவ்வாறு சபை நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் 06 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா.133,220 தொகையான கடனை சபையினால் அறவிடமுடியவில்லை.

(ஈ) 2008 தொடக்கம் 2013 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் ஊழியர்களின் சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்ட ஓய்ூதியப் பங்களிப்புப் பணம் ரூபா.548,525 தொகையை விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்ூதிய நிதியத்திற்கு அனுப்பி வைக்க சபை இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) மாகாண நிதி ஒழுங்கு விதி இல.163.3 இன் பிரகாரம் முற்பணங்கள் அனைத்தும் 10 நாட்களுக்குள் தீர்த்து வைக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 07 வருடங்கள் பழமை வாய்ந்த ரூபா.191,544 பெறுமதியான முற்பணங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) எட்டு வருடங்கள் பழமை வாய்ந்த ரூபா.5,428,716 தொகையான கேள்வி வைப்புக்கள், வருமானம் தொடர்பான வைப்புக்கள், நானாவித வைப்புக்கள் மற்றும் நூலக வைப்புக்கள் தொடர்பாக நிதி ஒழுங்கு விதி 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) 2015 ஆம் ஆண்டின் இருப்புக் கணக்கெடுப்பின் போது இருப்பு கணக்கெடுப்பு சபையால் சுட்டிக்காட்டப்பட்ட பின்வரும் இருப்புப் பற்றாக்குறைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| விபரம் | எண்ணிக்கை |
|---|---|
| கதிரைகள் | 98 |
| மேசைகள் | 11 |
| மின்விசிறி | 03 |

| | |
|---|---|
| Projector | 01 |
| Camera | 01 |
| GI Pipe | 15 |
| நீர்த்தாங்கி | 02 |
| குறிஞ்சான்கேணி பொது நூலக புத்தகங்கள் | 992 |

3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

சபையில் 2011 சனவரி தொடக்கம் திசெம்பர் வரையான காலப்பகுதியில் கடமை புரிந்த 13 ஊழியர்களுக்கான சேமலாப நிதிய பங்களிப்புப் பணம் ரூபா.462,112 தொகையையும் , 2012 சனவரி தொடக்கம் 2013 ஒகஸ்ட் வரையான காலப்பகுதியில் கடமை புரிந்த 16 ஊழியர்களுக்கான சேமலாப நிதிய பங்களிப்புப் பணம் ரூபா.748,864 தொகையையும் குறித்த காலத்தில் செலுத்தத் தவறியமையால் தண்டப்பணம் ரூபா. 540,770 தொகையை சபை செலுத்தியிருந்தது.

3.3 ஒப்பந்த முகாமைத்துவம்

3.3.1 நடுத்தீவு சந்தைக் கட்டட மீள் நிர்மாணம்

பிரதேச சபைகளை வலுவூட்டும் தேசிய வேலைத் திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் நடுத்தீவு சந்தைக் கட்டடத்தை மீள் நிர்மானம் செய்வதற்கான ஒப்பந்தம் ரூபா 3,000,000 தொகைக்கு நெடுந்தீவு சனசமூக நிலையத்திற்கு 2014 நவம்பர் 14 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

அ) மேற்குறித்த சந்தைக் கட்டட வேலை தொடர்பாக தண்ணீர் இணைப்புப் பெறுவதற்கான வேலை ஒப்பந்தகாரரால் செய்யப்படாதிருந்த போதிலும் அவ்வேலை திருப்திகரமாக முடிவுறுத்தப்பட்டதாக தொழில்நுட்ப உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட்டு ரூபா.24,122 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

ஆ) 2015 நவம்பர் 20 ஆம் திகதி ஒப்பந்தக்காரரினால் கட்டட வேலை "ர்த்தி செய்யப்பட்டு கட்டடம் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் இன்று வரை எத்தேவைக்கும் பயன்படுத்தப்படாமையினால் மேற்கொள்ளப்பட்ட செலவீனம் விளைவற்ற செலவீனமாக மாறியுள்ளது.

3.3.2 பொது மலசலகூடம் மற்றும் ஓய்வு அறை அமைத்தல்

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதி ஒதுக்கீட்டின் கீழ் பொது மலசலகூடம் மற்றும் ஓய்வு அறை நிர்மாணித்தலுக்கான ஒப்பந்தம் ரூபா.1,000,000 தொகைக்கு நெடுந்தீவு சனசமூக நிலையத்துக்கு 2016 ீன் 06 ஆந் திகதி சபையினால் வழங்கப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இவ்வேலை 2016 செப்தம்பர் 06 ஆம் திகதி நிறைவு செய்யப்பட்டு சபைக்கு கையளிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் இன்றுவரை செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா.43,563 பெறுமதியான கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகள் முடிவுறுத்தப்படாதிருந்த போதிலும் அவ் வேலைகள் திருப்தியாக முடிவுறுத்தப்பட்டதாக தொழில்நுட்ப உத்தியோகத்தரால் சிபாரிசு செய்யப்பட்டு கொடுப்பனவுச் சிட்டையும் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

| விபரம் | BOQ இல | தொகை |
|---|---|---|
| | | ரூபா |
| Wash Basin | 23 | 9,316 |
| Name Board | 32 | 9,500 |
| Towel Rail | 22 | 774 |
| Plastic Chair | 33 | 11,373 |
| 25W Energy Saver lamp | 15 | 12,600 |
| | | 43,563 |

(இ) இக்கட்டடத்திற்கு மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டதற்கமைய மின்சார வசதி மற்றும் நீர் இணைப்பு என்பன இன்றுவரை வழங்கப்பட்டிருக்காததால் இக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டும் பயன்படுத்த முடியாது காணப்படுகின்றது.

### 3.3.4 சுற்றுச்சூழல் பிரச்சினைகள்

2000 ஆம் ஆண்டு 53 ஆம் இலக்க மற்றும் 1988 ஆம் ஆண்டு 56 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1980 ஆம் ஆண்டு 47 ஆம் இலக்க தேசிய சூழல் சட்டத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 1533/16 இலக்க 2008 சனவரி 25 ஆம் திகதிய வர்த்தகமாணி அறிவித்தலின் பிரகாரம் மத்திய சுற்றாடல் அதிகார சபையிடமிருந்து உரிமம் பெறப்படாது விலங்கறுமனைகள் நடாத்தப்படுகின்றது. மேலும் இங்கு அறுக்கப்படும் விலங்குகளின் இரத்தம் மற்றும் கழிவுகள் அருகிலுள்ள ஆற்றில் கலக்கப்படுதல் காரணமாக சுற்றாடல் மாசடைவதற்கு வழிவகுத்துள்ளது

## 4. மனிதவள முகாமைத்துவம்

முகாமைத்துவ சேவை அதி விசேட தரம்; I இற்கான பதவி ஒன்று கடந்த 09 வருட காலமாகவும் சிற்றூழியர்களுக்கான 03 பதவிகள் கடந்த நான்கு வருட காலமாகவும் வெற்றிடமாகக் காணப்பட்ட போதிலும் அதனை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் ஒவ்வொரு கட்டுப்பாடுகளிற்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் மீது விசேட கவனம் செலுத்த வேண்டும்.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | i. பேரேடுகள் நாளது வரையாக முறையாக பேணப்படல்.<br>ii. சொத்துக்கள் செலவீனங்களின் தன்மை அடிப்படையில் வகைப்படுத்தப்படல். |
| (ஆ) வருமான முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படல். |
| (இ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படல். |
| (ஈ) ஒப்பந்த முகாமைத்துவம் | i. ஒப்பந்தங்கள் வழங்கப்படும் போது பெறுகை வழிகாட்டி பின்பற்றப்படல்.<br>ii. சன சமூக நிலையங்களுக்கு ஒப்பந்தம் வழங்கும் போது நிதி ஆணைக்குழுவின் சுற்றுநிருபம் பின்பற்றப்படல். |